**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி –02 - 2020**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 02 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தற்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவராக உள்ளன. கொழும்பு பெரும்பாக பகுதியிலுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் முறைமை வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்கும் தன்மையை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1230.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.44 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 1042.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.00 மில்லியனை நிதியளிப்புச்செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 187.72 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 1.44 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்ரெம்பர் 23 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2019 யூன் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

## 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கடன் வட்டியை சரியாக அடையாளங் கண்டு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மிகவும் நேர்த்தியான முறையில் வட்டி கிரயத்தை வேறாக்குவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையுடனும் திறைசேரியுடனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இத்தேவைப் பாட்டுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |

## 2.2 சட்டங்கள் விதிகளுக்கு இணங்காமை

| சட்டங்கள் விதிகளுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் 9.3 ஆம் பிரிவு | வழிகாட்டல் குழு குறைந்தது இரு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும். இருப்பினும் 2020 ஆம் ஆண்டிற்குள் இரண்டு வழிகாட்டல் குழு கூட்டங்கள் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. | 2020 மார்ச் மாதத்திலிருந்து காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கூட்டங்களை ஒழுங்குபடுத்துவது, கொவிட்-19 தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களை மீறுவதாக அமைவதால் சாத்தியமில்லாததாக காணப்பட்டது. | மாற்றுவழியாக நிகழ்நிலை கூட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

## 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் | | தாமதம் / கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க் கப்பட்ட செயல் முன்னே ற்றம் சதவீதம் | அடைந்த செயல் முன்னேற்ற ம் சதவீதம் | | |
| 1) வடிகாலமைப்பு மேற்பார்வை நிறுவன மேம்பாட்டு நிபுணர்களின் ஆதரவு | வடிகாலமைப்பு மேற்பார்வை நிறுவன மேம்பாட்டு நிபுணர்களின் ஆதரவு | 100 | 55.03 | 2016 ஏப்ரல் 25 இல் SMEC International Private Ltd. Company க்கு ஒப்பந்த வழங்கப்பட்டதுடன் 2020 ஏப்ரல் 25 ஒப்பந்தக் | பெறுகை நடைமுறையில் ஏற்பட்ட தாமதம், நகரத்தின் தேசிய அபிவிருத்தியை கருத்திற் கொண்டு ஒப்படைக்கப்பட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காலம் காலாவதியானது இக்கூறுக்காக ரூபா 539 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா 441.6 மில்லியன் தொகை ஒப்பந்தக் காரருக்கு 2020 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரரினால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய முடியாது போனது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ஒப்பந்த உடன்படிக்கை முடிவடைந்து 8 மாதங்கள் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பெறுகை நடைமுறைகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்தம் வழங்கப்படவில்லை. | மேலதிக நோக்கு மற்றும் மோசமான மேற்பார்வையும் |
| 2) 97.2 கி.மீற்றருக்கான கழிவு நீர் மற்றும் குழாய்களின் தரநிலைமைகள் மதிப்பீடு, CCTV ஒப்பந்தம் | 97.2 கி.மீற்றருக்கான கழிவு நீர் மற்றும் குழாய்களின் தரநிலைமைகள் மதிப்பீடு, CCTV ஒப்பந்தம் | 100 | - | பெறுகை நடைமுறைகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்தம் வழங்கப்படவில்லை. | பெறுகை நடைமுறையில் ஏற்பட்ட தாமதங்கள் |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

கட்டம் 2 மற்றும் 3 இல் பெறுகை நடைமுறையில் தாமதம் ஏற்பட்டுள்ளன. நகரத்தின் தேசிய அபிவிருத்தியை கருத்திற்கொண்டு மேலதிகமாக கொடுக்கப்பட்ட நோக்கங்கள், நடைமுறையிலுள்ள ஒப்பந்த பொதியின் மோசமான செயலாற்றல், கிருலபனை நீர்பிடிப்பு பகுதியில் புதிய ஈர்ப்பு கழிவு நீரை வழங்குதல், விசை பிரதானங்கள் உந்தி நிலையங்கள் வழங்குதல் ஆகியவை ஆலோசனை ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான காரணங்களாகும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் காலாவதியாகுவதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| CCTV தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்தி கழிவு நீர் சுத்திகரிப்பு ஆய்வுகள்மேற்கொள்ளல் மற்றும் 108 கி.மீற்றருக்கு கழிவு நீர் குழாய்கள் தொடர்பான தரவுத்தளமொன்றை ஒழுங்குபடுத்தும் பெறுகை நடைமுறையை 2016 யூலை 01 இல் ஆரம்பிப்பதற்கு நிரற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் 2020 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான மேலதிக நிதியை வெள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை ஒப்பந்தத்திலுள்ள சேமிப்பின் மூலம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிகழ்ச்சித் திட்டத்தின் காலம் காலாவதி யாகுவதற்கு முன்னர் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்து வதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்**

| தொழில் நிலைகள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | அனுமதிக் கப்பட்டது | 2020 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங் களின் எண்ணிக்கை | | |
| கட்டுமான முகாமையாளர் | 02 | 01 | 01 | போதிய ஆளணி பற்றாக்குறை யினால் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் செயலாற்ற லுக்கு பாதிப்பை ஏற்படுத்துமென ஏற்றுக் கொள்கின்றேன். | வெற்றிடங்களுக்கு தகுதியான ஆளணிகளை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |
| செயற்திட்ட பொறியியலாளர் | 08 | 02 | 06 | | |
| செயற்திட்ட பொறியியலாளர் (பயிற்சி) | 01 | - | 01 | | |
| செயற்திட்ட உதவி பொறியியலாளர் | 08 | 03 | 05 | | |
| **மொத்தம்** | **19** | **06** | **13** | | |